## நிகழ்நிலை முறையில் சான்றிதழ்களை விநியோகித்தல்

**விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**

01. நிகழ்நிலை முறையில் 2001ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் நடாத்தப்பட்ட க.பொ.த. (சாதாரண தர), க.பொ.த. (உயர் தர) பரீட்சைகளின் சான்றிதழ்களுக்காக மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

02. சான்றிதழ்களுக்காக அவற்றின் உரிமையாளர்களால் மட்டுமே விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

03. விண்ணப்பதாரிகள் **தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, சுட்டெண், வருடம்** ஆகிய தகவல்களை சரியாக உள்ளடக்குதல் வேண்டும். அத்தகவல்கள் தொடர்பான முழுமையான பொறுப்பும் விண்ணப்பதாரியையே சாரும்.

**04. விண்ணப்பதாரியால் (சான்றிதழ் உரிமையாளர்) செய்யப்படுகின்ற எந்த ஒரு கொடுப்பனவும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.**

**05.** குறித்த பரீட்சையில் எந்தவொரு பாடத்திற்கும் தோற்றாத விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் விநியோகிக்கப்பட மாட்டாது. **அவ்வாறான விண்ணப்பதாரர்கள் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கவோ கொடுப்பனவுகளை மேற்கொள்ளவோ கூடாது.**

06. சான்றிதழ்களுக்கு விண்ணப்பிப்பது தொடர்பாக உள்ளீடு செய்யப்பட்டுள்ள காணொளியைப் பார்வையிடுவது பொருத்தமானது.

**07. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்படுகின்ற சான்றிதழ்களுக்காக பரீட்சைகள் திணைக்களத்தினால் வன்பிரதிகள் விநியோகிக்கப்பட மாட்டாது.**

08. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் சான்றிதழ்களின் மென்பிரதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், அதுபற்றி பரீட்சைகள் திணைக்களத்தினால் உரிய **விண்ணப்பதாரிக்கு குறுஞ்செய்தி மூலம்** அறிவிக்கப்படும். **வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட்ட பின்னர்** உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழின் மென்பிரதி உரிய விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். தமது தேவைக்கேற்ப விண்ணப்பதாரி மென்பிரதியை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். இதற்காக பரீட்சைகள் திணைக்களத்துக்கோ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கோ வருகை தரத்தேவையில்லை.

09. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் சான்றிதழ்கள் சம்பந்தமாக விண்ணப்பித்ததிலிருந்து குறிப்பு இலக்கத்துடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டதாக குறுஞ்செய்தி கிடைக்கும் வரையில் ஏற்படும் சிக்கல்களுக்காக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் 011-2788137 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் அதன் பின்னர் ஏற்படும் பிரச்சினைகளுக்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 0117024798, 0112335942 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

10. நிகழ்நிலையில் பெற்றுக்கொள்ளப்படும் சகல சான்றிதழ்களினதும் செம்மைத்தன்மையை www.certificates.doenets.lk Request Certificates → Certificate Issued Online என்ற இணைப்பின் ஊடாக சான்றிதழின் குறிப்பு இலக்கத்தைப் (CXXXXXX) பயன்படுத்தி பரீட்சித்துக் கொள்ளலாம். மேலும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் சான்றிதழ்களின் செம்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு அவ் அமைச்சினால் உள்ளீட்டு பிரவேச வசதிகள் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

11. உள்நாட்டுப் பயன்பாட்டுக்காக விண்ணப்பிக்கும் சான்றிதழ்கள் விரைவுத் தபால் மூலம் மட்டும் விண்ணப்பதாரியினால் உள்ளீடு செய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

**12.** Australian விசாவிற்காக விண்ணப்பிக்கின்ற சான்றிதழ்களை பரீட்சைகள் திணைக்களத்துக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ள முடியும். **இதன் போது செல்லுபடியாகும் கடவுச்சீட்டையும் (Passport) அதன் நிழற்பிரதியையும் கொண்டு வருதல் கட்டாயமானதாகும்.**

13. Foreign country வகை சான்றிதழ்கள் வெளிநாட்டு முகவரிகளுக்கு மட்டுமே தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

14. பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள (Witheld) அல்லது பெறுபேறுகள் இதுவரை தீர்மானிக்கப்படாத (Not Decided – 'X') பாடங்களை உள்ளடக்கிய சான்றிதழ்கள் நிகழ்நிலையில் விநியோக்கிக்கப்பட மாட்டாது. அவ்வாறான விண்ணப்பதாரர்கள் பரீட்சைகள் திணைக்களத்துக்கு வருகை தந்து,

15. பரீட்சைகள் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்படும் சான்றிதழை அல்லது சேவையை எந்தவிதமான சட்ட விரோத செயற்பாடுகளுக்கோ அல்லது மூன்றாம் தரப்பின் தனித்துவத்துக்கு பங்கம் ஏற்படும் விதத்திலோ பயன்படுத்துதல் கூடாது.